

# முதல் வார்த்தைகள்

## உங்களுக்குத் தெரியுமா?

உங்களது குழந்தையின் கற்பனைத் திறன் வளர்கிறது. தாமே கதைகளைக் உருவாக்கவும், அவற்றைச் சொல்லவும் குழந்தைகள் விரும்புவர்.

நீண்ட கதைகளை அவர்களால் கேட்க இயலும், மற்றும் நீங்கள் அவர்களுக்கு இடும் 2-3 கட்டளைகளைப் பின்பற்ற இயலும். அசையாமல் உட்காருவது கடினமாயிருக்கும்.

உங்களது குழந்தை நிறைய காரியங்களைத் தாமாகவே செய்ய முயல்வர். பாடசாலைக்குச் செல்ல இது நல்ல பயிற்சியாகும்.

பெரும்பாலான குழந்தைகளால் பென்சிலை அவர்கள் பயன்படுத்த விரும்பும் கையின் ஆட்காட்டி விரலாலும், பெருவிரலாலும் பிடிக்க இயலும். பள்ளியில் எழுதுவதற்கு ஏற்ற மிகச் சிறந்த பிடிப்பு இதுவாகும்.

படம் வரைவது எழுதுவதற்குத் தேயைான உறுதியை அவர்களது கைக்குத் தருகிறது.

வெறும் கிறுக்கல்களுக்கும், எழுத்துக்களுக்கும் இடையே உள்ள வேறுபாடுகளை குழந்தைகள் புரிந்து கொள்ளத் துவங்குகின்றனர்.

## இச்சமயத்தில் நீங்கள் என்ன செய்யலாம்?

புத்தகங்கள், தேவையற்ற கடிதங்கள், வரைபடங்கள், சமையல் குறிப்புகள் மற்றும் பத்திரிக்கைகள் ஆகியவற்றைப் படித்துக் காட்டுவதன் மூலம் அவர்களது கற்பனைத் திறன் வளர உதவுகிறது.

குழந்தைகளுக்குப் பிடித்தமான மற்றும் புதிய பாட்டுக்களையும், நர்சரிப் பாடல்களையும் பாடிக் காட்டுங்கள். ஆரம்ப வகுப்புப் படிக்கும் புத்தகங்களில் உள்ள பாங்குகளும், ஒலிகளும் இந்தப் பாடல்களில் காணப்படும்.

அவர்களுடன் விளையாடும் போது அடிப்படைக் கருத்துக்களைக் கற்றுத் தாருங்கள் (உதாரணமாக: 'கடைசியில்', 'மத்தியில்', 'முன்பாக', 'ஆழமான', 'சிறிது', 'அதிகமாக', 'குறைந்த' ஆகியன). பாடசாலையில் கணிதப் பாடத்தில் இது உதவும்.

டி.வி. மற்றும் விடியோ பார்ப்பதை ஒரு நாளைக்கு 1 - 2 மணி நேரம் வரை இருக்குமாறு பார்த்துக் கொள்ளுங்கள். குழந்தையுடன் சேர்ந்து டி.வி. நிகழ்ச்சிகள் பற்றிப் பேசுங்கள்.

உங்கள் குழந்தையின் பெயரில் உள்ள எழுத்துக்களை அடையாளம் காணவும், சொல்லவும், எழுத ஆரம்பிக்கவும் ஊக்கம் கொடுங்கள். எழுத்துக்களின் பெயர்கள், வார்த்தைகளில் எழுத்துக்களுக்கு உள்ள ஒலிகள் ஆகியவை பற்றிப் பேசுங்கள்.

மணல், விரல் மூலம் பயன்படுத்தப்படும் வண்ணம், கலர் பென்சில்கள் ஆகியவற்றின் உதவியால் எழுத்துக்களை வரைந்து காட்டுங்கள். எங்கு ஆரம்பித்து எந்தப் பக்கமாய்ப் போக வேண்டும் என விளக்குங்கள். (பின்பக்கம் பார்க்க.)

## யாரால் உதவ இயலும்?

வெவ்வேறு வீதங்களில் குழந்தைகள் வளர்ச்சி அடைகின்றனர். ஆனாலும், உங்களுக்குக் கவலைகள் ஏதும் இருப்பின் காத்திருக்க வேண்டாம். கேளுங்கள்!

- குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள்.
- உங்களது உள்ளூர் மருத்துவர் , சமூகத் தாதி அல்லது பணியாளர்.
- முன்பருவப் பள்ளிப் பணியாளர்கள், குழந்தைப் பேணக மையம் மற்றும் விளையாட்டுக் குழு.

கூடுதல் தேவைகளுக்கு உங்களது மருத்துவர் அல்லது குழந்தை ஆதரவுச் சேவகர்களால் மேலதிகக் கருத்துக்களை வழங்க இயலும்.

முதல் வார்த்தைகள் இணையத்தளம — **www.earlywords.info**